# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2356/21 - 2023 නොවැම්බර් මස 01 වැනි බදාදා - 2023.11.01

*2356/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

LD.B - *36/ 1957* (vii)

***1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, அமைச்சர், வைத்தியர் ரமேஷ் பத்திரண ஆகிய நான், இக்கட்டளை மூலம் 1969 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதிய 14853/ 3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான முதலாம் அட்டவணையில் அமைத்துருவாக்கப்பட்டதும் உள்ளடக்கப்பட்டதுமான குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில் பொறுப்பு முயற்சியின் நோக்கங்களுக்காக அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் அவ்வட்டவணையின் 7 ஆம் விடயத்தை உடனடுத்து பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-*

"8. ஆயுர்வேதத்துக்கிணங்க பரிகரிப்பு மற்றும் நிவாரணம் வழங்குகின்ற மருத்துவ நிலையங்கள் மற்றும் சுகாதார மேம்பாட்டு நிலையங்களை தாபித்தலும் பேணுதலும் அத்தகைய நிலையங்களின் சுமுகமான பணியாற்றுகையை உறுதிப்படுத்துவதற்கு தோதான ஆட்கள் அல்லது நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடுதல் ;

9. ஆயுர்வேதம் எனும் விடயத்தில் கற்கைநெறிகளையும் ஆயுர்வேதச் செயல்முறை தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குகின்றதான உரிய நடவடிக்கை முறைகளைப் பின்பற்றுகின்ற கல்வி நிறுவனங்களைத் தாபித்தலும் அத்தகைய கற்கைநெறிகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் தெரிவாகவும் தயாரிப்புக்காகவும் ஆட்களுடன் அல்லது நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதலும் அவை தொடர்பான விரிவுரைகளை நடாத்துதலும் அத்தகைய கற்கைநெறிகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்கின்றவர்களுக்கு திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் அளித்தலும் ;

10. வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படக்கூடியதான பயிர்கள், அறுவடை அல்லது அத்தகைய வளர்ச்சியின் மிகுதிகளை உள்ளடக்கியதான பயிர்ச்செய்கையின் 1961 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, ஆயுர்வேதச் சட்டத்தின் 77 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆயுர்வேதக் கோவையில் விதித்துரைக்கப்பட்டவாறான ஆயுர்வேத தொழிலில் பயன்படுத்தப்பட வேண்டிய எவையேனும் மருத்துவ தாவரங்களைப் பயிரிடுதல் மற்றும் அவற்றின் முன்னெடுப்புக்காக எவரேனும் தோதான ஆட்களுடன் அல்லது எவையேனும் நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளில் ஈடுபடுதல்.".

வைத்தியர் **ரமேஷ் பத்திரண**,
சுகாதார அமைச்சர்.

கொழும்பு,
2023, ஒற்றோபர் 30.

EOG 10 - 0307